
சேது சமுத்திரத் திட்டமும்
ராமன் பாலமும்
-கலைஞர்



ராமன் - ராமாயணம் பற்றி கலைஞரின்

எழுத்துகள் - பேச்சுகள்

சேது சமுத்திர திட்டமும்
ராமன் பாலமும்

(ராமன் பாலம், ராமன், இராமாயணம் பற்றி
கலைஞர் அவர்களின் பேச்சுகள், எழுத்துகள் அடங்கியவை)

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு
கலைஞர் மு.கருணாநிதி
முதல் அமைச்சர், தமிழ்நாடு அரசு

திராவிடர் கழக வெளியீடு
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை-600 007

முதல் பதிப்பு - செப்டம்பர், 2007

© பதிப்புரிமை பெற்றது

பக்கங்கள் : 40

நன்கொடை (குறைந்த அளவு) : ரூ. 10/-

27196
த 386.44
பெ.ச

அச்சுக் கோப்பு
பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம், சென்னை-600 007

அச்சிட்டோர்
'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை- 600 007

விற்பனை உரிமை
திராவிடன் புத்தக நிலையம்,
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி,
சென்னை -600 007. தொலைபேசி: 26618161
பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி - 620 017 தொலைபேசி: 2771153

நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பவர்கள் யாராக இருந்தாலும் தேசத்தின் எதிரிகளே, துரோகிகளே!

சென்னை – அமைந்தகரை – புல்லாரெட்டி அவென்யூவில் "சேது சமுத்திரத் திட்டமும், ராமர் பாலமும்" என்ற தலைப்பில் 16.5.2007 அன்று நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் முதல் அமைச்சர் கலைஞர் பேசியதாவது:

நான் நீண்ட நேரம் உரையாற்றுவதற்குத் தேவையில்லை என்றே கருதுகிறேன். பெறவேண்டிய விளக்கங்களை எல்லாம் நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். தரவேண்டிய விளக்கங்களை எல்லாம் நம்முடைய தலைவர்கள் உங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். என்னுடைய சட்டமன்றப் பேரவையினுடைய அய்ம்பதாவது ஆண்டு பொன்விழா பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு முன்பு நான் சட்டப் பேரவைத் தேர்தலுக்கென்று முதலில் அண்ணா அவர்களால் ஆணையிடப்பட்டு நின்ற தொகுதி குளித்தலை தொகுதி. அங்கே நான் சென்று போட்டியிடப் போகிறேன். ஆதரவு தாரீர் என்று வாக்காளப் பெருமக்களைக் கேட்ட போது, அந்த ஊர் பெரியவர்களும், நாட்டாண்மைக் காரர்களும் என்னைச் சந்தித்து என்னைக் கேட்டார்கள் என்றால், நீங்கள் வெற்றி பெற்றால் இந்த குளித்தலைக்கும், முசிறிக்கும் இடையே ஒரு பாலத்தைத் கட்டித் தருவீர்களா என்று கேட்டார்கள். காரணம் குளித்தலைக்கும் முசிறிக்கும் இடையே காவேரி ஆறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கின்றது. குளித்தலையிலிருந்து முசிறிக்குச் செல்ல வேண்டுமானால், குளித்தலையிலிருந்து திருச்சிக்குச் சென்று, பிறகு திருச்சியிலிருந்து முசிறிக்குச் செல்ல வேண்டும். அதற்கு ஏறத்தாழ 65 கி.மீ. தூரம் செல்லவேண்டும். அதனால் தான் அவர்கள் கேட்டார்கள்.

இப்போது நாங்கள் எதிரே ஒரு மைல் தூரத்தில் உள்ள முசிறிக்குச் செல்ல குளித்தலையிலே உள்ள மக்கள் 65 கி.மீ. சுற்றிக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. இடையே பாலம் கட்டி விட்டால் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஆற்றைக் கடந்து நாங்கள் சில நிமிட நேரங்களில் முசிறியை அடைவோம். முசிறிக்கும், குளித்தலைக்கும் இடையே அப்படிப் பட்ட தொடர்பு எளிதிலே ஏற்படுமேயானால், முசிறி சந்தைக்கு நாங்கள் செல்லவும், அங்கே கிடைக்கின்ற பொருட்களைக் குளித்தலைக்குக் கொண்டு வரவும், அதைப் போல குளித் தலையிலே உள்ள பொருட்களை முசிறி சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யவும், அதன் காரணமாக எங்கள் வாழ்வும் வளம் பெறும். முசிறியிலே உள்ள மக்களின் வாழ்வும் வளம் பெறும். செய்வீர்களா என்று கேட்டார்கள்.

முதல் வேலையாக குளித்தலைக்கும் முசிறிக்கும் இடையே பாலம் கட்டித் தந்தேன்

நான் சொன்னேன். இப்போது தான் நான் வந்திருக்கிறேன். நீங்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கினால், உடனே பாலத்தை அத்தனைக் கோடி ரூபாய் செலவழித்து கட்ட முடியுமோ, முடியாதோ, ஆனால் படிப்படியாக நாங்கள் வெற்றி பெற்று, எங்கள் கட்சி ஒரு காலத்தில் ஆட்சிக்கு வருமேயானால் இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித் தருவேனென்று நான் 1957-இல் சொன்னேன். ஆனால் 1957-இல் திமுக ஆட்சிக்கு வரவில்லை. 1967-இல் தான் தி.மு. கழகம் அண்ணா தலைமையில் ஆட்சிக்கு வந்தது. அண்ணா மறைந்த பிறகு 1969-இல்தான் நான் முதலமைச்சராக ஆனேன். முதல் வேலையாக குளித்தலைக்கும் முசிறிக்கும் இடையே உள்ள அந்தப் பாலத்தைத்தான் கட்டித் தந்தேன். இப்போது அங்கே நடைபெறுகின்ற போக்குவரத்தைக் காணுகிறேன். நானே அந்தப் பாலத்தின் வழியாக பல முறை பயணம் செய்து இருக்கிறேன். மக்கள் எவ்வளவோ பரவசத்தில் இருக்கிறார்கள். வாணிபம் இன்றைக்கு எந்த அளவிற்கு அங்கே வளர்ந்திருக்கிறது. வளம் எப்படி கொழிக்கிறது என்பதையெல்லாம் காண்கிறேன்.

அறிவாயுதத்தை கூர் தீட்டத்தான் இந்தப் பிரச்சாரக் கூட்டம்

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறாமல், இப்போது உள்ள நிலையே நீடிக்குமானால், எனக்கு முன்னால் பேசிய தலைவர்கள்

எல்லாம், இங்கே எடுத்துக் காட்டியதைப் போல், இலங்கையைச் சுற்றிக் கொண்டு தான் தமிழகத்திலேயிருந்து கடலில் செல்கின்ற கப்பல்கள் எல்லாம் தங்கள் பயணத்தை நடத்த வேண்டும். ஏறத்தாழ ஆயிரம் கி.மீ. தூரம் அவர்கள் அதிகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். எனவே பொருளாதாரத்திலும் சரி, பயணச் செலவிலும் சரி, சிக்கனமாக, சுருக்கமாக இருக்கக்கூடிய ஒன்றுதான் இந்தப் பாலத்தினால் கிடைக்கக்கூடிய பலன். இதை திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது இங்கே வீற்றிருக்கின்ற கட்சிகள் - இத்தனை பேரும் ஆதரித்து, அந்தச் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டத்தைக் கூட்டி நீங்களும் ஆதரவு தர வேண்டுமென்று கேட்கிறோமென்றால், சிலர் எதிர்க்கிறார்கள். அப்படி எதிர்க்கிற சிலர் கடவுளைக் காட்டி எதிர்க்கிறார்கள். மதத்தைக் காட்டி எதிர்க்கிறார்கள். புராணத்தைக் காட்டி எதிர்க்கிறார்கள். ஆயுதங்களைக் கொண்டு அல்ல - படை திரட்டியல்ல - படை திரட்டி இருந்தால் சமாளிக்க முடியும் - ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்தால் சமாளிக்க முடியும் - ஆனால் அவர்கள் எதிர்ப்பது, புராணங்களைக் காட்டி, கடவுளின் பெயரைச் சொல்லி, புராண காலத்து புருஷர்களின் பெயர்களைச் சொல்லி நம்மைப் பயமுறுத்தி, அச்சுறுத்தி, அந்தப் பாலத்தை இடித்தால் நாட்டிற்கே ஆபத்து, இந்தியாவிற்கே ஆபத்து என்றெல்லாம் சொல்லி இன்றைய தினம் பிரச்சாரம் செய்து கொண்டிருக் கிறார்கள். அதை முறியடிக்க வேண்டுமேயானால் நாங்கள் உங்களை சந்தித்து உங்களுடைய அறிவாயுதத்தைக் கூர் தீட்ட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் பிரச்சாரக் கூட்டம்.

தமிழகம் முழுக்க பிரச்சாரம் நடைபெற வேண்டும்

நம்முடைய தளபதி வீரமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், சென்னையிலே மாத்திரம் அல்ல, தமிழகம் முழுவதும் இந்தப் பிரச்சாரக் கூட்டங்கள், இந்த விளக்கக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். நடைபெறுவதற்கு நம்முடைய தோழர்கள் அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சீர்படுத்துவதற்காக திருவரங்கம் கோயில் இடிக்கப்படவில்லையா?

என்ன சொல்கிறார்கள்? கருணாநிதி, வீரமணி, கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள், பா.ம.கட்சித் தோழர்கள் இவர்களுக்கு எல்லாம்

ராமனைப் பிடிக்காது. இவர்கள் ராமனுக்கு விரோதிகள், ஆகவே தான் ராமர் பாலத்தை இடிக்கத் தொடங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். கடவுள் பெயரால் இருக்கின்ற கட்டடங்களை நீங்கள் இடிக்கவில்லையா? எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த நூறாண்டு காலத்தில் திருவரங்கம் கோவில் கோபுரம் எத்தனை முறை இடிக்கப்பட்டிருக்கிறது? எதற்காக? பழுது பார்ப்பதற்காக - இல்லை என்று சொல்லமுடியுமா? அந்தக் கோயில் கோபுரம் யாருக்கு சொந்தம்? அங்கே அனந்தசயனம் செய்து கொண்டிருக்கின்ற மகா விஷ்ணுவிற்குச் சொந்தம் அல்லவா? மகாவிஷ்ணு படுத்திருக்கின்ற மண்டபத்திலே அவர் காது இடிபட, செவிடுபட கோபுரத்தை இடித்து இடித்து, அங்கே ஜீரணோத் தார்ண மகா கும்பாபிஷேகம் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்திக் கொண்டு இருக்கிறார்களே, அப்படி இடிப்பது பாபம் அல்லவா? எண்ணிப் பாருங்கள். உங்கள் கூற்றுப்படி உங்கள் வழிக்கு வந்தே கேட்கிறேன்.

ராஜாஜிக்கு கிண்டியிலே கழக ஆட்சியில் நினைவு மண்டபம்

என்னைப் பொறுத்த வரையில் நான் கேட்க விரும்புகிறேன். இப்போது தான் தளபதி வீரமணியிடம் நான் பேசிக் கொண்டு இருந்தேன். எங்களுக்கு என்று ஒரு சமுதாயக் கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மற்றவர்களுடைய கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அதைத் தாக்குகின்ற முறையிலோ, வெறுக்கின்ற முறையிலோ என்றைக்கும் நாங்கள் நடந்து கொண்டதில்லை. குறிப்பாகச் சக்ரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார், "சக்ரவர்த்தித் திருமகன்" என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டவர். அவர் பெயரால் நினைவு மண்டபம் கிண்டியில் தி.மு. கழக ஆட்சியில், நான் முதலமைச்சராக இருந்த போது தான் கட்டப்பட்டது. நான் காமராஜருடைய நினைவு மண்டபத்திற்கு என்ன முகப்பு என்று சிற்பி கேட்ட போது "கைராட்டை" என்று சொன்னேன். அண்ணாவின் நினைவு மண்டபத்திற்கு என்ன முகப்பு என்று கேட்டபோது, தெரிவித்த முகப்புதான் இன்றைக்கு அங்கே அமைந்திருக்கிறது. தந்தை பெரியாரின் நினைவு மண்டபத்தில் என்ன சின்னம் வைப்பது என்று நானும் வீரமணியும் யோசித்து

வைக்கப்பட்டு உள்ள சின்னம்தான் தீபச் சுடர். அதைப் போல ராஜாஜி நினைவு மண்டபத்திற்கு என்ன சின்னம் என்று கேட்ட போது, அவருக்குப் பிரியமான கடவுள் ராமர், ராமர் கிரீடத்தையே கோபுரமாக வையுங்கள் என்று நான் சொல்லி, அதைத்தான் அங்கே வைத்திருக்கிறார்கள். ராமர் பெயரால் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காகவா அந்தப் பாலம் வேண்டாம் என்று சொல்கிறோம்? இல்லை. பாலமே இல்லை. எப்படி இடிக்க முடியும்? இல்லாத பாலத்தை இடிப்பதாக ஏன் சொல்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன என்பது எங்களுக்குப் புரிகிறது. இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றக் கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு மாநாட்டிலும், சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நெய்வேலி நிலக்கரி, சேலம் இரும்பு என்கிற வரிசையில் முதல் இடத்தைப் பெற்றது சேது சமுத்திரத் திட்டம்.

நாட்டுப் பிரிவினையைக் கேட்பது - ஏன்?

தி.மு.கழகத்திலிருந்து பிரிந்தவர்கள்தான் அதிமுக, மதிமுகவினர் எல்லோரும். திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்தது திராவிட முன்னேற்றக் கழகம். எனவே தமிழ்நாடு வாழ, வளம் பெற என்னென்ன திட்டங்கள் முக்கியத்துவம் பெற்றவை என்பதைப் புரிந்து கொண்டுதான் அந்தத் திட்டங்களைக் கோரிப் பெறுவதற்குப் போராடினோம். இந்தத் திட்டங்களை வைத்து இவை எல்லாம் நிறைவேறாததற்குக் காரணம் நம்முடைய நாடு தனிநாடாக இல்லாதது அல்லவா என்று கூடக் கேட்டோம். அந்த அளவிற்கு நாங்கள் கேட்ட பிறகுதான் உங்களுக்கு என்னென்ன வேண்டும் என்று சொல்லுங்கள் என்று ஒரு சமரச முடிவுக்கு வந்தார்கள். வந்தபிறகுதான் நாங்கள் நாட்டுப் பிரிவினையை விட்டு விட்டோம் என்றாலும் கூட, நாங்கள் வைத்த கோரிக்கைகள் அப்படியே இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று தான் மத்தியிலே இருக்கிற சர்க்காரோடு வாதாடினோம். தொடர்ந்து வாதாடினோம். அது வாஜ்பாயின் அரசாக இருந்தாலும், அதற்குப் பிறகு எங்களுடைய ஆதரவோடு, எங்களுடைய ஒத்துழைப்போடு, எங்களுடைய வாழ்த்தோடு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற டாக்டர் மன்மோகன்சிங்

அவர்களின் அரசு ஆனாலும், அவர்களிடம் எதற்கு வாதாடுகிறோம்? எதற்காக அவர்களிடம் நாம் கோரிக்கை வைக்கிறோம்? தமிழ்நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்காக - அப்படி வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றுதான் இந்த சேது சமுத்திரத் திட்டக் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நாங்கள் மன்மோகன்சிங் அவர்களிடம் வைத்து வெற்றி பெறுவதற்கு முன்பு இந்தக் கோரிக்கையை ஆராய்ந்து பார்த்து, இதை நிறைவேற்றலாம் என்ற முடிவுக்கு வந்த ஆட்சி ஒன்று உண்டு. அதைத்தான் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். வாஜ்பாய் ஆட்சியிலேயே இதற்கு அடி கோலப் பட்டது. வாஜ்பாயி ஆட்சியிலே இந்தத் திட்டத்தைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துகளை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துகளை ஏற்றுக்கொண்டு, அந்தத் திட்டம் வாஜ்பாயி ஆட்சியிலே ஆய்வுக்கு வைக்கப்பட்டது. அப்படி வைக்கப்பட்ட அந்தத் திட்டத்தைத்தான் 1996 மார்ச் மாதம் மத்திய அரசின் சார்பாக தூத்துக்குடி துறைமுக நிருவாகம், நாக்பூரில் உள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (National Environmental Engineering Institute - NEERI) என்கிற மத்திய அரசின் நிறுவனத்துக்குச் சுற்றுச் சூழல் ஆய்வுப் பணியை வழங்கியது.

NEERI முதல் மூன்று வழித்தடங்களை நிராகரித்து விட்டு நான்காவது வழித்தடத்தையும், அய்ந்தாவது வழித் தடத்தையும் ஆய்வு செய்து, மத்திய கப்பல் துறையில் துறைமுகங்கள் மேம்பாட்டு ஆலோசகர் அவர்களின் தலைமையில் இருந்த வழி காட்டுக் குழுவுடன் கலந்துரையாடிய பின்னர், நான்காவது வழித்தடத்தை பரிந்துரை செய்தது. அதாவது கடலிலே செல்ல நான்கைந்து வழித்தடங்கள் ஆராயப் பெற்று, நான்காவது வழித்தடம் பரிந்துரை செய்யப்பட்டது.

ஆனால், அன்றைய தினம் வாஜ்பேயி தலைமையில் இருந்த அரசின் மத்திய கப்பல் துறை அமைச்சராக இருந்த அருண்ஜேட்லி அவர்கள் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என 9-3-2001 அன்று ஆணை பிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து அக்டோபர் 2001 இல் நீரி புதிய ஆய்வுகளை மேற்கொண்டது.

பா.ஜ.க., ஆட்சியிலேயே...

அக்டோபர் 2002 இல், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் பாரதீய ஜனதா கட்சியின் கப்பல் துறை அமைச்சர் வி.பி. கோயல் அவர்களிடம் நீரி நிறுவனத்தின் அறிக்கை அளிக்கப்பட்டது. 23-10-2002 இல் அப்போது கப்பல் துறை இணை அமைச்சராக இருந்த நம்முடைய திருநாவுக்கரசர் அவர்கள் ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். அதிலே, நீரி நிறுவனத்தின் பரிந்துரையான, "ஆடம்ஸ் பிரிட்ஜ்" எனப்படும் (இதைத்தான் ராமர் பாலம் என்கிறார்கள்) ஆதாம் பாலத்தை வெட்டிச் செல்லும் வழித்தடம்தான் சுற்றுச்சூழல் உயிர்சார் இயற்கை வளம் மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறப்பானது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போது நாம் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டிருக்கிறோமே, இந்தப் பாதைதான் முற்றிலும் சரியானது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டது, பாரதீய ஜனதா தலைமையிலே, வாஜ்பேயி தலைமையிலே இருந்த ஆட்சியிலே. எந்த முகத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு பா.ஜ.க.வினர் இது கூடாது. ராமர் பாலத்தை இடித்தால் உலகமே கவிழ்ந்துவிடும் என்று ராமர் பாலத்தைக் காப்பது என்ற பெயரால் சேது சமுத்திரத் திட்டத்திற்கு இன்றைக்கு இடையூறு விளைவிக்கிறார்கள் என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் சொன்னதையே மறந்துவிட்டு அ.தி.மு.க. குறுக்கே நிற்கிறது

நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் நாம் ஈடுபட்டு, நமக்கு எங்கே இதன் காரணமாக இந்தத் திட்டம் வந்துவிடுமோ என்ற அந்த அசூசையின் காரணமாக இந்தத் திட்டத்தை வேண்டாம் என்று சொல்கிறார்களே அல்லாமல், இந்தத் திட்டத்தை வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் அவர்கள் மாநாட்டிலே தீர்மானம் போட்டதை எல்லாம் இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும், நம்முடைய திராவிடர் கழகத்தின் தலைவர், தமிழர் தலைவர் வீரமணி அவர்களும், என்னுடைய அருமை நண்பர் தொல்.திருமாவளவன் அவர்களும்,. கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும், நம்முடைய பா.ம.க. கட்சியின் தலைவரும் அத்தனை பேரும் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இது நடைபெறக்கூடாது என்கிற ஒரேயொரு நல்ல

எண்ணத்தின் (?) காரணமாகத்தான் எதிர்க் கட்சிகளாக இன்றைக்குத் தங்களைக் காட்டிக் கொள்கிற அதிமுக ஆனாலும், அவர்களோடு இணை சேர்ந்திருக்கின்ற கட்சிகள் ஆனாலும் தாங்கள் சொன்னதையே மறந்துவிட்டு இன்றைக்கு இந்த திட்டத்திற்குக் குறுக்கே நிற்கின்ற காட்சியை நாம் காண முடிகிறது.

10-5-2001 இல் ஒரு தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. நான் அதைப் படித்தால் இது திமுகவின் தேர்தல் அறிக்கை என்று கருதுவீர்கள். அந்தத் தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியைத்தான் படித்துக் காட்டுகிறேன்.

"இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்கு வரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல்வழியாக கிழக்கு நோக்கி கப்பல்கள் செல்ல வேண்டுமானால் இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாகத்தான் சேது சமுத்திரத் திட்டம். இத் திட்டத்தின் படி ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலை மன்னார்க்கும் இடையில் உள்ள ஆடம்ஸ் பாலம் பகுதியில் கப்பல் போக்கு வரத்திற்குத் தடையாக உள்ள மணல்மேடுகள் -இவற்றையெல்லாம் அகற்றி ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்."

மணல்மேடுகளை எல்லாம் அகற்றி - எதை ராமர் பாலத்தை - இப்போது சொல்லப்படுகின்ற ராமர் பாலம்தான் மணல்மேடு. - அந்த மணல் மேடுகளை எல்லாம் அகற்றி, ஆடம்ஸ் பாலத்தை அகற்றி ஆழப் படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டம் என்று அறிக்கை வெளியிட்ட கட்சி எது தெரியுமா? அதிமுக எந்த அண்ணா, எந்தத் திட்டத்திற்காக நாள் எல்லாம் பாடுபட்டாரோ, எந்தத் திட்டத்திற்காக அவர் முதலமைச்சராக ஆன பிறகும் கூட எழுச்சி நாள் கொண்டாடுங்கள் என்று தம்பிமார்களுக்கு எல்லாம் கட்டளையிட்டு, தமிழகம் முழுவதும் சேது சமுத்திரத் திட்டத்திற்காக முழங்கச் சொன்னாரோ, அந்த அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வெட்கம் இல்லாமல் வைத்துக் கொண்டு, அந்த அண்ணா வலியுறுத்திய வளமிகுந்த திட்டத்தை, எதிர்காலத் தமிழகத்தை வாழ வைக்கக்கூடிய திட்டத்தை, வாணிபத்தைப் பெருக்கக் கூடிய திட்டத்தை, நிறுத்துங்கள் என்று

கருணாநிதி நாத்திகன், வீரமணி நாத்திகனோடு சேர்ந்து கொண்டு கூத்தடிக்கிறான். இவர்களோடு காங்கிரசும் சேர்ந்து கொண்டு, கம்யூனிஸ்ட்களும் சேர்ந்து கொண்டன. ஆகவே இதை விடப் போவதில்லை. நான் எதிர்த்தே தீருவேன். இந்த அணை கட்டுவதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து நிறுத்துங்கள் என்று இன்று நேற்று அல்ல.

ராமனுக்கே சாமி எங்கள் தலைவர்

என்றைக்கு தலைமை அமைச்சர் மன்மோகன்சிங் அவர்களும், தியாகத் திருவிளக்காம் நம்முடைய அம்மையார் திருமதி சோனியா காந்தி அவர்களும் மதுரைக்கு வந்து இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்களோ அன்றைக்கு எடுத்த எரிச்சல் இன்னமும் அடங்கவில்லை. அந்த எரிச்சல் இன்னமும் அடங்காத காரணத்தால் ஆலாய் பறக்கிறார்கள். கூத்தடிக்கிறார்கள், குதிக்கிறார்கள், கோவெனக் கதறுகிறார்கள். அய்யோ, நாட்டிற்கே நாசம் வந்து விட்டதே என்கிறார்கள். உன்னையே அய்ந்தாண்டு காலம் பொறுத்துக் கொண்ட ராமன் எங்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டானா? (பலத்த கைதட்டல்) நாங்கள் ராமனுக்கு என்ன கொடுமை செய்கிறோம்? இன்றைக்கு ராமன் பாலம், ராமன் பாலம் என்று நாடு முழுவதும் பேச வைத்திருக்கிறோமே இந்த ஒரு புகழ் போதாதா ராமனுக்கு? (கைதட்டல்) ராமன் பொறுத்துக் கொள்வானா என்று கேட்கிறீர்களே, ஏன் பொறுத்துக் கொள்ள மாட்டான். எந்த ராமன்? ராமனுக்கே சாமி அல்லவா எங்கள் தலைவர் ராமசாமி (தைதட்டல்) அவர் இட்ட கட்டளைதான், கட்டளைகளிலே ஒன்றுதான் சேது சமுத்திரத் திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் பெரியார் இட்ட ஆணையை நிறைவேற்றுகிறோம் என்று பொருள். காமராஜர் கண்ட கனவை நிறைவேற்றுகிறோம் என்று பொருள்.

சர்.ஏ.ராமசாமி முதலியார் ஆரம்பித்த திட்டத்தை முடிக்கிறோம் என்று பொருள். தமிழ்நாட்டிலே உள்ள வல்லுநர்கள், வாணிப வேந்தர்கள் எல்லாம் தங்களுடைய ஆசைக் கனவாக எதைக் கொண்டு இருந்தார்களோ அந்தக் கனவை நிறைவேற்றுகிறோம் என்று பொருள். தமிழகம் வளம் கொழிக்க, தமிழகம் வருங் காலத்திலே வெளிநாடுகளோடு போட்டியிட

தமிழகம் மாத்திரமல்ல, தமிழகமும் இணைந்த இந்தியா ஒரு வல்லரசாகத் திகழ உதவக்கூடிய சிலவற்றில் சேது சமுத்திரத் திட்டமும் ஒன்று.

மத்திய அரசுக்கு நினைவூட்டுகிறோம்

சேது சமுத்திரத் திட்டமே எல்லாம் என்று சொல்கிற அளவிற்கு நான் பைத்தியக்காரன் அல்ல. கங்கை புரமும் வளர வேண்டும். காவேரி புரமும் செழிக்க வேண்டும். இப்படி இந்தியா முழுவதும் வளம் பெற ஆங்காங்கு திட்டங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். 100 கோடி மக்கள் இன்றைக்கு அதையும் தாண்டி இந்தியாவிலே. 30 கோடி மக்கள் என்று பாரதி பாடினான். எந்த இந்தியாவைப் பற்றி, பர்மாவும், இலங்கையும், பிரியாத பாகிஸ்தானும் சேர்ந்து இருந்த இந்தியாவில் 30 கோடி மக்கள் என்று அன்றைக்கு பாரதி பாடினான். இன்றைக்கு பாகிஸ்தான் இல்லை. பர்மா இல்லை. இலங்கை இல்லை. இவ்வளவும் இல்லாமல் 100 கோடியைத் தாண்டி இருக்கிறது மக்கள் தொகை என்று சொன்னால், மத்திய சர்க்காரும் முன்பு காட்டிய விறுவிறுப்பை இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திலே இப்போது காட்டுவதில்லை. இனி மேலாவது காட்டவேண்டு மென்ற இந்தக் கூட்டத்தின் வாயிலாக மத்திய சர்க்காருக்கு நான் நினைவூட்டுகிறேன்.

குடும்பக்கட்டுப்பாடு திட்டம் தீவிரப்படுத்தப் படாவிட்டால்; 100 கோடி மக்கள் தொகை என்பது இன்னும் பத்தாண்டு காலம் கழித்து, இதே அண்ணா நகரில் கூட்டம் நடத்தினால் 200 கோடி மக்கள் தொகை என்ற கணக்கை நானோ அல்லது வீராசாமியோ உங்களிடம் சொல்ல வேண்டியிருக்கும். எனவே இந்த 100 கோடி என்பது 200 கோடியாக ஆகுமேயானால், சேது சமுத்திரத் திட்டம் போன்ற பல திட்டங்கள்தான் நாட்டை வாழ வைக்க வேண்டும். ஒரு பக்கத்திலே குடும்பநலத் திட்டம், அதே நேரத்திலே நாட்டுத் திட்டம். இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற வேண்டுமே யானால் குறுக்கே வருகின்ற இந்தப் பெருச்சாளிகளுக்கு எல்லாம் இடம் தராதீர்கள். இந்தக் குருட்டுத்தனங்களுக்கெல்லாம் இடம் தராதீர்கள். இந்தப் புராணிகர்களுடைய புலம்பல்களுக்கெல்லாம் இடம் தராதீர்கள். இதிகாசத்தின் பெயரால், இலக்கியத்தின் பெயரால், வரலாற்றின் பெயரால், நம்முடைய வளத்தைத்

தடுக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நாட்டின் விரோதிகள், இன்னும் சொல்லப் போனால் தேசத் துரோகிகள் - அந்த தேசத் துரோகிகளுக்கு வழி விடாமல் இது போன்ற திட்டங்களுக்கு உங்களுடைய அன்பான ஆதரவைத் தரவேண்டும், கை உயர்த்தி, இந்தக் கடமையை முடிப்போம் என நீங்கள் எழ வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

அஇஅதிமுக தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது?

இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாக கிழக்கு நோக்கி கப்பல்கள் செல்ல வேண்டுமானால் இலங்கையைச் சுற்றிக் கொண்டு தான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான் சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் அகற்றி ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்.

(-அஇஅதிமுக-வின் 2001-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை-பக்:83-84.)

(குறிப்பு: ஆடம்ஸ் பிரிட்ஜ் என்றும், மணல் மேடுகள் என்றும் அன்று கூறிய நிலையில், இப்பொழுது திடீரென்று "ராமன் பாலம்" என ஜெயலலிதா கூறும் முரண்பாட்டைக் கவனிக்கவும்)

நேருவின் பேச்சைத் தூக்கி எறிந்துவிட்டு ராமன் பாலம் கட்டினான் என்பதா?

அண்ணாவை ராமனுக்கு அடிமை ஆக்குவதா?

சேலத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் முழக்கம்

சேலத்தில் 14.9.2007 அன்று முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:

இன்று சேலத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஓர் அரசு விழாவா? அல்லது வழக்கம் போல் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் நடத்திக் காட்டு கின்ற ஓர் அரசியல் மாநாடா? என்பது எனக்கும் புரியவில்லை. உங்களுக்கும் புரிந் திருக்க நியாயம் இல்லை. பலர் வியப்புறும் வண்ணமும், சுப்புலட்சுமி போன்றவர்கள், பொறாமைப்படுகின்ற வகையிலும், இந்த விழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

உள்ளபடியே இந்த விழாவில் ஒரு கோடி ரூபாயை சேலம் மாவட்ட தி.மு.கழகம் சார்பில் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கழக முன்னணியினர் பலரை கலந்து கொண்டு, பெரியார் வழியில் ஆய்வு நடத்த, அண்ணா வழியில் ஆய்வு நடத்த ஒரு ஏற்பாட்டை அந்த ஒரு கோடி ரூபாயை முதலீடாகக் கொண்டு வருகின்ற வட்டியிலிருந்து நடத்த வேண்டும் என்று கூறி அதை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு என் வாயிலாக இன்றைய தினம் வழங்கியிருக்கின்றனர்.

இந்த மக்கள் நல்வாழ்வு நிதியளிப்பு விழா மாநாட்டில் இது மற்றொரு நிதியளிப்பு விழாவாகும். ஒன்று மக்கள் பிரச்சினைக்காக நடைபெற்ற நிதியளிப்பு விழா. அவர்களுடைய பொருளாதாரத் துறையில் அவர்களுடைய சமுதாயத் துறையிலே, அவர்கள் மேலோங்கி நிற்பதற்கு, வாழ்வதற்கு, வழியமைப்பதற்கு நடைபெற்ற நிதியளிப்பு விழா. என்னிடத்திலே வழங்கி பெரியார் பல்கலைக்

கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அந்த அறக்கட்டளைக்காக நிதியளிப்பு விழா, இப்பொழுது இருக்கின்ற மக்கள் பிரச்சினைக்காக அல்ல. இப்பொழுது வாழுகின்ற மக்களுக்காக அல்ல. எதிர்காலத்திலே அதாவது வருங்காலத்திலே வாழப் போகிற மக்களுக்காக, இளஞ்செல்வங்களுக்காக, அவர்களுக்கு எத்தகைய பகுத்தறிவு நீரூற்றி அவர்களையெல்லாம் பசுமையாக வளர்க்க வேண்டும் என்பதற்காக அடி கோலுகின்ற ஆக்க பூர்வமான ஏற்பாடுதான் அது என்பதை நான் இங்கே உறுதிப் படுத்திக் கொள்கிறேன்.

சேது சமுத்திரம் கொண்டு வருவோம் என்றவர்கள் இன்றைக்கு அதற்கு முதல் எதிரிகளாக உள்ளார்கள்

சிலபேர் தேர்தல் அறிக்கையிலே சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்றார்கள். இன்றைக்கு சேது சமுத்திரத் திட்டத்திற்கு அவர்களேதான் முதல் எதிரிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கைக்கும், அவர்களின் இன்றைய நடவடிக்கைக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அன்றைக்கு சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வந்தே தீருவோம் என்று தோள் தட்டியவர்கள், வீராப்பு பேசியவர்கள் இன்றைக்கு எங்கே போனார்கள்? நாங்கள்தான் அதைக் கண்டுபிடித்தவர்கள், சேது சமுத்திரத் திட்டத்தையே முதன் முதலிலே சொன்னவர்களே நாங்கள் தான், அதற்காக 45 மணி நேரம் நாடாளுமன்றத்திலே பேசியவர்கள் நாங்கள் என்றெல்லாம் புயலெனச் சீறினார்களே, அந்தப் புயல் போன இடம் என்ன? எங்கே போய்ச் சேர்ந்தது அந்தப் புயல்? இப்போது யார் சொல்லுகிறோம்? நாமல்லவா? சேது சமுத்திரத் திட்டத்திற்காக தேர்தல் நேரத்து வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், உழைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கிறோம். அதைத் தடுப்பதற்கு வருகின்றவர்கள் யார்? அது வேண்டுமென்று அப்போது சொன்னவர்கள், அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லி மக்களிடம் வாக்கு பெற்றவர்கள், இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் மறந்துவிடக் கூடாது. ராமர் பாலத்தைக் காட்டி, 17 லட்சம் வருஷத்துக்கு முன்பு ராமாயண காலத்தில் ராமர் பாலம்

கட்டினார், அந்தப் பாலத்தை இடித்தால் நாங்கள் சும்மா விடமாட்டோம் என்று பா.ஜ.க.வினர், புராணிகர்கள் இன்றைக்குப் போர்க்கொடி தூக்கி இருக்கிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், அணி வகுத்துக் கிளம்புகிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், 17 லட்சம் வருடங்களுக்கு முன்பு ராமாயணம் நடந்ததாகச் சொல்கிறீர்களே, அதிலே ராமர் ஒரு அவதாரமே அல்ல. ராமர் என்று ஒருவர் இல்லையென்று மத்திய சர்க்கார் சார்பிலேயே அது ஒரு கற்பனைக் கதாபாத்திரம் என்று உச்ச நீதிமன்றத்திலே எழுதிக் கொடுத்துவிட்டு, நேற்றைக்கு எழுதிக் கொடுத்து இன்றைக்கு அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள் என்றால் - ஆட்சி கிடக்கட்டும், கேவலம் ஆட்சி, நாம் ஏற்றுக் கொண்ட பகுத்தறிவு என்ன ஆவது? நாம் ஏற்றுக் கொண்ட சுயமரியாதைக் கொள்கை என்ன ஆவது? அந்தத் தன்மான உணர்ச்சி என்ன ஆவது?

நேருவின் கருத்தைத் தூக்கி எறிந்துவிட்டு ராமர் பாலம் கட்டினார் என்பதா?

நேற்று வரையிலே ராமாயணம் ஒரு கற்பனை என்று சொன்னவர்கள், சொன்னதற்கு ஆதாரம் தந்தவர் சாதாரண மானவர் அல்ல, பண்டித ஜவகர்லால் நேரு, நேருவே சொன்னார், ராமாயணம் நடந்த கதையல்ல, ராமாயணம் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தை வைத்து எழுதப்பட்ட ஒரு கற்பனை என்று பண்டித நேருவே சொன்னார். அந்த நேருவை இன்றைக்கு தூக்கி எறிந்துவிட்டு, ராமர் இருந்தார் என்றும், அவர் பாலம் கட்டினார் என்றும், அந்தப் பாலத்தை இடிக்கக்கூடாது என்றும் சொல்கிறார்கள். நேற்று என்னிடம் ஒருவர் சந்தித்தே பேசினார். கடவுள் எல்லாம் இருக்கட்டும், ராமர் எல்லாம் இருக்கட்டும், லெட்சுமணன் எல்லாம் இருக்கட்டும், அந்தப் பாலம் அணுகுண்டு தயாரிக்கின்ற ஒப்பற்ற உலோகத்தை அடக்கிக் கொண்டிருக்கின்ற பாலம், அதை இடிக்கக் கூடாது. அது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும் என்று சொன்னார்.

நான் சொன்னேன், நாங்கள் நாளை முதல் இந்தப் பேச்சை விட்டுவிடுகிறோம். நீங்கள் மாத்திரம் ஒரு கூட்டம் போட்டு இந்த உண்மையை அங்கே சொல்லுங்கள். நாங்கள் ராமர் பெயரைப்

பயன்படுத்துவதே அந்தப் பாலத்தின் மீதுள்ள பக்தியினால் அல்ல, அதிலே தோரியம் இருக்கிறது. அது அணுகுண்டு தயாரிக்கப் பயன்படுவது. அது ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும். ராமருக்காக அல்ல, ராமன் பாலம் அல்ல, அந்தத் தோரியத்துக்காகத்தான் ராமர் பாலம் என்ற உண்மையை நீங்கள் ஊரறிய ஒரு கூட்டத்திலே உரைத்தால் மறுநாளே நாங்கள் உங்களிடத்திலே மன்னிப்பு கேட்டுக் கொண்டு, உங்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். முடியுமா? என்று கேட்டேன்.

போரை ஆரம்பித்து விட்டு இன்றைக்கு முடிக்கத் தெரியாமல் பேரம் பேசுகிறார்கள்

நாங்கள் கட்சி நடத்த வேண்டாமா? என்று அவர் சொன்னார். அவர்கள் கட்சி நடத்த வேண்டுமாம். பா.ஜ.க.வை நடத்த வேண்டுமாம். அதற்கு நாம் இளிச்சவாயர்களாம். தி.மு.க.வும் , பா.ம.க.வும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் - இந்தக் கட்சிகள்தான் இளிச்சவாய்க் கட்சிகளாம். நாமெல்லாம் ஏமாற வேண்டுமாம். இவர்கள் எப்படியோ அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாம். போரை ஆரம்பித்து விட்டார்கள், முடிக்கத் தெரியாமல் விழிக்கிறார்கள். ஆகவே நம்மிடம் வந்து பேரம் பேசுகிறார்கள்.

இது நாட்டைக் கெடுக்கக் கூடிய, நாட்டின் வளத்தைக் கெடுக்கக் கூடிய ஒரு பெரிய பொருளாதார விஷயத்தைப் புரிந்து கொள்ளாத, புத்திசாலித்தனமற்றவர்களுடைய கேலிக் கூத்து, எவ்வளவு காலமாகச் சொல்லி வருகிறோம்? இந்தச் சேது சமுத்திரத் திட்டம் மாத்திரம் நிறைவேறினால், கப்பல் போக்குவரத்து இலங்கையைச் சுற்றி வரத் தேவையில்லை. இப்போது இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் கப்பல் போகிறது. 500 மைல் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான பொருளாதாரச் செலவு எவ்வளவு? இந்தப் பாதை அமைந்து விட்டால் குறுக்கே போகலாம். இலங்கைத் தீவைச் சுற்றிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே நம்முடைய பயணச் செலவும் குறைவு, தூரமும் குறைவு, சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலே சிறந்த திட்டம் என்று வல்லுனர்கள், விஞ்ஞானிகள், பொருளாதார மேதைகள்

அத்தனை பேரும் அறிவித்த பிறகு கடவுள் பெயரைச் சொல்லி, திட்டத்திற்கு முட்டுக் கட்டை போடுகிறார்கள்.

அண்ணாவை ராமருக்கு அடிமையாக ஆக்குவதை எண்ணி வெட்கப்படுகிறோம்

அதே அடிப்படையில் இன்றைக்கு உச்சநீதி மன்றத்தில் முன்னாள் முதல் அமைச்சரும், தேர்தல் நேரத்திலே தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று எழுதி வாக்களித்தவருமான ஜெயலலிதா உச்சநீதிமன்றத்திலே ராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று வழக்கு போட்டிருக்கிறார். இவர்களுடைய கட்சிக்குப் பெயர் அண்ணாவின் பெயர்! அண்ணா, உனக்காக நாங்கள் வெட்கப் படுகிறோம், உனக்காக நாங்கள் அழுகிறோம், உனக்காக நாங்கள் துயரப்படுகிறோம். உனக்காக நாங்கள் முக்காடு போட்டுக் கொள்கிறோம். நாங்கள் எல்லாம் உயிரோடு இருக்கும் போது, உன் பெயரைச் சொல்லி உன்னை ராமருக்கு அடிமையாக ஆக்குகிறார்களே என்பதை எண்ணி நாங்கள் வெட் கப்படுகிறோம்.

"கம்பரசம்" எழுதிய அண்ணாவே - "ராமாயண ஆராய்ச்சி" எழுதிய பெரியாரே, உங்கள் பெயர்களை எப்படி எல்லாம் இன்றைக்குக் களங்கப்படுத்துகிறார்கள், அவர்களும் ஒரு கட்சி நடத்துகிறார்கள், நாங்களும் இருக்கிறோம் என்று உயிரோடு. உன்னுடைய தம்பிமார்கள், பெரியாரின் தொண்டர்கள் என்று பெயர் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இதையெல்லாம் நான் இந்தப் பெரிய விழாவிலே அரசியலாக ஆக்குகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. இந்தச் சமுதாயம், சமுதாயம், சமுதாயம் - நம்முடைய இனத்திற்காகப் பேசப்படுகின்ற பேச்சு. இங்கே தம்பி ஆறுமுகம் ஒரு கோடி ரூபாய் கொடுத்து ஆய்வு நடத்தப் போகிறோம் என்று சொன்னாரே, அப்படி நடத்துகின்ற ஆய்வுகளிலே இதுவும் ஓர் ஆய்வுதான். இந்த ஆய்வின் வெளிப்பாடுதான், அதைத் தான் நான் இங்கே சொல்லு கிறேன்.

ஆகவே நாம் திருந்துவோம், நம்முடைய நாட்டைத் திருத்து வதற்கு முன்பு நம்முடைய நாட்டு மக்களைத் திருத்துவோம். நம்முடைய நாட்டை வல்லரசுகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமே யானால், மக்களை வீரர்களாக ஆக்கவேண்டும், விவேகிகளாக

ஆக்கவேண்டும், விஞ்ஞானிகளாக ஆக்க வேண்டும், விஞ்ஞான உலகில் அவர்களை உலவவிட வேண்டும். இப்படிப்பட்ட தவறான தத்துவார்த்தங்களுக்கெல்லாம் அவர்களை தாசர்களாக ஆக்காமல் பாதுகாப்போம். அந்த உறுதியை இது போன்ற விழாக்களிலே, சேலத்திலே நாம் எடுத்துக் கொண்டால், சேலத்திலே எடுக்கின்ற உறுதி, மாறாத உறுதியாக, மலை போன்ற உறுதியாக, யாரும் வெல்ல முடியாத உறுதியாக, அசைக்க முடியாத உறுதியாக இருக்கும் என்று சொல்லி, இவ்வளவு பெரிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய அருமைத் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கும், உங்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

-இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

ராமனே உடைத்து விட்டானே!

ராமன் கட்டினான் பாலம் என்கின்றனர். கம்ப ராமாயணக் கூற்றின்படி, அந்தப் பாலத்தை ராமனே உடைத்துவிட்டான் (ஆதாரம்: கம்பராமாயணம் மீட்சிப்படலம் 171 ஆம் பாடல்)

மரக்கல மியங்க வேண்டி வரிசிலைக் குதையாற் கீறித்
தருக்கிய விடத்துப் பஞ்ச பாதக ரேனுஞ் சாரிற்
பெருக்கிய வேழு மூன்று பிறவியும் பிணிக ணீங்கி
நெருக்கிய வமரர்க் கெல்லா நீணிதி யாவரன்றே

இராமன் புஷ்பகத்தின்மீது ஏறிச் செல்லுகையில் கடலில் அவ்விடத்து மரக்கலங்கள் இடையே இனிது செல்லுதற்பொருட்டு தனது வில்லின் நுனியாற் சேதுவைக்கீறி யுடைத்து வழிவிட்டார்.

மரக்கப்பல்கள் ஓட்டுவதற்கு அப்பாலம் தடையாக இருந்தது என்று கருதி, ராமனே அந்தப் பாலத்தை உடைத்துவிட்டான் என்று ராமாயணத்தில் கூறிய பிறகு, ராமன் பாலம் அங்கு இப்போது இருக்கிறது என்பது அறிவு நாணயமா? இராமனையே மறுப்பவர்கள் இவர்கள் தானே!

அன்றைக்கு மரக்கப்பல் ஓட பாலத்தை இடிக்க நேர்ந்தது, இன்று பெரிய பெரிய கப்பல்கள் பயணிக்க மணல் திட்டாகிய அந்தப் பாலத்தை இடிக்க நேருகிறது-அவ்வளவுதானே!

யார் ராமன்? எப்போது அந்தப் பாலத்தைக் கட்டினான்? ஆதாரம் உண்டா?

ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் (15.9.2007) முதல் அமைச்சர் கலைஞர் உரையாற்றியதாவது:

நாம் நம்முடைய தேர்தல் அறிக்கைகளிலே எல்லாம் சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தினோம். அப்படி வலியுறுத்தி வலியுறுத்தி - நம்முடைய நல்ல வாய்ப்பாக, இந்தியாவின் தலைமைப் பொறுப்பில் டாக்டர் மன் மோகன்சிங் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் தலைவி கண்ணியத்திற்குரிய சோனியா காந்தி அவர்கள் பொறுப்பேற்கவும் - அவர்களிடம் வாதாடி, வலியுறுத்தி, பலமுறை விளக்கங்களை அளித்து இந்தத் திட்டம் நிறைவேறினால் எவ் வளவு தொலைவு பயணம் மிச்சமாகும், இலங்கையைச் சுற்றிக் கொண்டு போகின்ற நேரம் மிச்சமாகும், பொருளாதார வளம் எப்படி யெல்லாம் செழிக்கும், நம்முடைய வாணிபம் வெளிநாடுகளில் எப்படி பரவும், வெளிநாடுகளுக்கும் திராவிடத்திற்கும் உரிய அந்தக் காலத் தொடர்புகள் மீண்டும் வருமா வராதா என்ற விளக் கங்களையெல்லாம் அவர்களுக்கு அளித்து, அதனை நிறை வேற்றுகின்ற அனுமதியை மத்திய அரசு நமக்குத் தந்தது. அதைத் தம்பி டி.ஆர். பாலு அவர்களை முன்வைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முனைந்து, வேக வேகமாக அந்தத் திட்டம் நிறைவேறுகின்ற கட்டத்திலே வந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அதற்காக செலவழிக்கிறோம். ஆனால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவழித்து தமிழகத்தினுடைய, தென்னகத்தினுடைய பொருளாதாரம் முன்னேறினால் இந்தியாவின் பொருளாதாரமும் வளரும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ள அந்தத் திட்டத்திற்கான அனுமதியைப் பெற்று, அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கைக்காரன் ரகசியமாகச் சொன்னானோ என்னவோ, இந்தத் திட்டம் நிறைவேறினால் எங்களுக்குக் கஷ்டம், தமிழ்நாடு முன்னேறிவிடும் என்ற பயத்தின் காரணமாக இலங்கைக்காரனின் ரகசியப் பேச்சைக் கேட்டோ அல்லது தமிழகம் எந்தக் காலத்திலும் இனி வளம் பெறக்கூடாது, இது தரை மட்டமாக ஆக வேண்டும் என்கின்ற அந்தக் கொடுங்குணத்தின் காரணமாகவோ இந்தத் திட்டத்தைத் தடுக்க ஓர் ஆளைப் பிடித்தார்கள். யார்? 17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் இருந்தாராம். அவர் பெயர் ராமனாம். அந்த ராமன் கட்டிய அணை, பாலம் அங்கே உள்ளது. அதைத் தொடாதே என்கிறார்கள். யார் ராமன்? எந்தப் பொறியியல் கல்லூரியிலே படித்துப் பொறியாளராக ஆனவன்? எப்போது அந்தப் பாலத்தைக் கட்டினான்? ஆதாரம் உண்டா? இல்லை. வேண்டுமென்றே, தமிழ்நாட்டு மக்கள், பொதுவாக இந்திய மக்கள், கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கை, புராண நம்பிக்கை உள்ளவர்கள், அவர்களிடத்திலே எதையும் சொல்லலாம், நம்புவார்கள். அந்த நம்பிக்கையை வைத்தே அவர்கள் கழுத்தை அறுக்கலாம். அந்த நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினாலே தான் இன்றைக்கும் இந்தியாவிலே நரபலிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இன்றைக்கும் இந்தியாவில் பால்ய விவாகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் இந்தியாவிலே கணவன் இறந்தால் அவனோடு சேர்த்து மனைவியை உடன்கட்டை ஏற்றுகின்ற பழக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ராமன் பெயரை இழுத்து விளையாடுகிறார்கள்

அப்படிப்பட்ட மூட, மவுடீக, மடத்தனமான மத வாதங்களை இன்றைக்கும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக ராமன் பெயரை இழுத்து அவர்கள் இன்றைக்கு நம்மோடு விளையாடுகிறார்கள். யாரோடு? எங்கே பெரியார் பிறந்தார் என்று கூடியிருக்கிறோமோ, அங்கே, அந்த ஈரோட்டுக் குருகுலத்தில், நம்மையெல்லாம் ஆளாக்கிய இந்தக் குரு குலத்தில் இன்னும் பெரியார் புகழ் மங்கவில்லை, அது ஓங்கி உயர்ந்து கொண்டிருக்கிறது, அது ஒளி விட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே மாத்திரமல்ல, உலகம் முழுவதும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்ற பெயர், பெரியாருடைய பெயர். அந்தப் புரட்சித் தலைவர் - அந்தப் புரட்சிக்காரர் - அந்தப் பெரியார் வாழ்ந்து, மறைந்து நம்மையெல்லாம் அவருடைய சுயமரியாதை இயக்கத்தின்

வடிவங்களாக உருவாக்கி விட்டு, உருவங்களாக அமைத்து விட்டு, வழித் தோன்றல்களாக ஆக்கி விட்டுச் சென்றிருக்கின்ற பெரியார் பிறந்த இந்தப் பூமியிலிருந்து இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கின்ற எதிர் காலத்தை இருள்மயமாக ஆக்குகின்ற ஒரு பயங்கரமான சதித் திட்டத்தை முறியடிப்பதற்கு ஒரு தீர்மானத்தை உங்கள் முன்னால் நான் இப்போது இந்த முப்பெரும் விழாவிலே கொண்டு வருகிறேன். அதை நீங்கள் ஏற்று வரவேற்று, நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம்:-

"ஏறத்தாழ நூறாண்டு காலக் கனவாகவும், திராவிட இயக்கத்தின் தனிப் பெரும் கோரிக்கைகளில் ஒன்றாகவும் இருந்து வந்த சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற இன்றைய மத்திய ஆட்சியின் பிரதமர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அருமைத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களும் பேருதவி புரிந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்துள்ள நிலையில் அதனைக் கெடுத்து, தென்னக மக்களுடைய பொருளாதார வளம் பெருகிட இயலாமல், ராமர் பாலம் என்ற மதவாத மிரட்டலைச் செய்திட ஒரு சில மதவாத அமைப்புகள் குறுக்கே நிற்பதற்கு; மத்திய அரசு அஞ்சி அதற்கு இடம் தரக்கூடாது என்றும், மதவாத மூட நம்பிக்கைகளை வேரோடு களையப் போரிட்ட ஈரோடு தந்த வள்ளல் பெரியார் பிறந்த மண்ணிலேயிருந்து இந்த மாபெரும் கூட்டத்தின் வாயிலாக தென்னக மக்களின் சார்பில் குரல் கொடுக்கிறோம்." (பலத்த கைதட்டல்.) என்பதைத் தீர்மானமாக நிறைவேற்றுகிறோம்.

இதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு மதித்து நடக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களும் இந்தியாவின் ஒரு பகுதியினர் தான் என்பதை எண்ணிப் பார்த்து மத்திய அரசு செயல்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவிலே சூளுரையாக நான் உரைத்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

இல்லாத கறுப்புப் பூனையை இருட்டில் தேடுவது போல...!

ராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று சுப்பிரமணிய சுவாமி என்பவர் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில்,

மத்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் இயக்குநர் - சி.தோர்ஜி ஒரு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவுக்கும் சுப்பிரமணிய சுவாமி போன்றோரின் வழக்கிற்கும் என்ன வித்தியாசம்? பெரிய வித்தியாசம் இருக்கிறது.

சுப்பிரமணிய சுவாமியும் - பா.ஜ.க.வினரும் - பா.ஜ.க. சார்ந்த மதவாத அமைப்புகளும், ராமாயணம் நடந்ததா இல்லையா என்பது பற்றிப் பார்க்காதீர்கள். ராமர் கடவுள் என்பதும் - அவருக்காக வானரங்கள் பாலம் அமைத்தன என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. ஆகவே ராமர் பாலத்தை இடிக்கக்கூடாது - என்கிறார்கள் அவர்கள்.

ஆனால் - தோர்ஜி அப்படி எல்லாம் கற்பனைத் தேரில் ஏறி - உலா வரவில்லை!

"ராமாயணம் நடந்த கதை அல்ல, அது வால்மீகியின் கற்பனைக் கதை!

ராமாயணத்தில் கூறப்படும் ராமர் - ராவணன் ஆகிய பாத்திரங்கள் இந்த பூமியில் வாழ்ந்தனர் என்பதற்கோ,

ராமருக்கும், ராவணனுக்குமிடையே சண்டை நடைபெற்றது என்பதற்கோ எந்தவித அடிப்படைச் சான்றும் கிடையாது.

வரலாற்றுப் பூர்வமான எந்த ஆதாரமும் இல்லாத கற்பனைக் கதைதான் ராமாயணம்"

- என்பதை தெளிவுபட சுட்டிக்காட்டியுள்ளார்.

ராமர் பாலம் என்ற ஒன்றே கிடையாது; அது வெறும் மணல் திட்டுகள் தான் என்பதையும் - விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் நீர் வள ஆய்வு மையம் சார்பில் தயாரிக்கப்பட்ட மனுவை ஆதாரம் காட்டி நிறுவியிருக்கிறார்.

அவர் சுட்டிக்காட்டிய அந்த ஆதாரம் வருமாறு:

"அகமதாபாத்திலுள்ள விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் நீர்வள ஆய்வு மையம் சார்பிலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மனுவில்,

ராமர் பாலம் இருந்ததாகக் கூறப்படும் பாக் ஜலசந்திப் பகுதியில் 'ராமர் பாலம்' தொடர்பாக ஒரு முழுமையான ஆய்வு நடத்தப்பட்டது.

அனைத்து நவீன அறிவியல் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி நடத்தப்பட்ட அந்த ஆய்வின் மூலம்,

- ஆதம் பாலம் என அழைக்கப்படும் 'ராமர் பாலம்' ஒரு மணல் திட்டு.

- அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதல்ல என்பது தெளிவாக நிரூபணமாகியுள்ளது.

- மேலும் 17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் அது ராமரால் உருவாக்கப்பட்டது என்பது வெறும் கற்பனையே.

- என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இப்படி விஞ்ஞானப்பூர்வமாக - ஆய்வு நடத்தி தொல்லியல் ஆய்வுத் துறை அறிக்கை தந்திருப்பது போல பா.ஜ.க.வினரால் - ராமாயணம் நடந்த கதைதான், ராமர் இருந்தார், அவர் கடவுள் - அவருக்காக குரங்குகள் ஒன்றுகூட கடலில் ஒரு பாலத்தைக் கட்டின என்பதைத் தெளிவுபடுத்த - ஏதாவது ஓர் ஆதாரத்தைக் காட்ட முடியுமா?

வெட்டுண்ட குதிரையைப் பட்டமகிஷிகள் புணர்ந்ததின் மூலம் குழந்தைகள் பெறமுடியும் என்று நிரூபித்துக்காட்ட முடியுமா?

மனிதர்களாலேயே பாலம் கட்ட முடியாத காலத்தில் - அதாவது பதினேழரை லட்சம் வருடங்களுக்கு முன்பு - குரங்குகள் பாலம் கட்டின. அதுவும் கடலில் கட்டின என்பதை நிரூபிக்கும் வகையில் ஏதாவது ஓர் ஆதாரம் காட்ட முடியுமா?

- இது மாதிரியான கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது என்பதால்தான் "அது எங்கள் நம்பிக்கை, இந்துக்களின் நம்பிக்கை" என்று நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் என்று ஒரே போடாகப் போடுகிறார்கள் புளுகுவெடியை!

அமெரிக்க - நாசா விண்வெளி மையத்தினர் எடுத்த படங்களில் இருக்கிறதே ராமர் பாலம் என்கிறார்கள்!

நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தினர் என்ன சொல்லுகிறார்கள்?

"நாங்கள் படம் எடுத்தது உண்மைதான்; ஆனால் அப்பகுதியில் ஒரு பாலம் இருக்கிறது; அது ராமர் கட்டிய பாலம் என்று ஒருபோதும் சொன்னதில்லை" - என்கிறது அது!

- 'முரசொலி', 14.9.2007

கடலுக்குள்ளும் மாற்றங்கள்:

உலகில் புவியியல் மாற்றங்கள் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன. இன்றைக்கு மலைகளாக இருக்கும் இமயமும், ஆல்ப்சும் கூட ஒரு காலத்தில் கடல் பகுதியாக இருந்தன என்கின்றனர் புவியியலார்கள்.

இன்றைக்குச் சிதறுண்டு கிடக்கும் கண்டங்கள் ஒரு காலத்தில் தொடர்ச்சியாகத்தான் இருந்தன. பூமியின் வெப்ப மாற்றத்தால் பிளவுகள் ஏற்பட்டன. கடலுக்குள்ளும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சென்னை அய்.அய்.டியின் கடல் சார் பொறியியல் துறைத்தலைவர் டாக்டர் ஆர்.சுந்தரவடிவேலு, பேராசிரியர் எஸ்.பி.சுப்பிரமணியன் ஆகியோர் கூறிய தகவல்களை கல்கி இதழ் (17.6.2007) வெளியிட்டுள்ளது.

ராமாயணம் நடந்ததா?
கற்பனைக் கதையா?

இல்லாத 'ராமர் பாலத்தை இடிக்காதே' என்று அடாவடித் தனத்தில் ஈடுபட்டுள்ள பா.ஜ.க., மதவெறியர்கள்

ராமாயணம் கற்பனை அல்ல

அது நடந்த கதை

ராமர் இருந்தார், பாலம் கட்டினார்

அவர் கடவுள்

என்றெல்லாம் கதைத்தபடியே இருக்கிறார்கள்.

ராமாயணம் எப்போது நடந்தது? ராமர் வாழ்ந்த காலம் எது? என்று கேட்டால் - திரேதா யுகத்தில் நடந்தது ராமாயணம்;

பதினேழரை லட்சம்

ஆண்டுகளுக்கு முன்பு

ராமன் - அயோத்தியில்

பிறந்தார்

- என்று பல முழம் பூக்களை - கேட்பவர் காதுகளில் தாராளமாகச் சுற்றி விடுகிறார்கள்.

ராமாயணம் நடந்த கதை என்று இந்த வினாடிவரை எவரும் சரித்திரபூர்வமாக நிரூபிக்க முன்வந்ததில்லை! நிரூபிக்க முடியாது!

சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று விஞ்ஞானம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது!

புத்திர காமேஷ்டி யாகம் செய்து வெட்டிப் போட்ட குதிரைகளைப் புணர்வதின் மூலம் ஒரு குழந்தையல்ல; நான்கு

குழந்தைகளைப் பெற முடியும் என்று எந்த அத்வானியாவது நிரூபித்துக் காட்டியதுண்டா?

தசரத மகாராஜாவுக்கு 60 ஆயிரம் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள 164 ஆண்டுகளுக்குமேல் பிடிக்குமே!

இந்த 2007 ஆம் வருடத்திலேயே - யாராவது ஒருவர் 100 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டால் - அது ஒரு பெரிய அதிசயமாகக் கருதப்படுகிறது! எல்லோராலும் 100 ஆண்டுகள் வாழ முடியும் என்று ஒங்கியடித்துக் கூற முடியவில்லை.

- பதினேழரை லட்சம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கூறப்படும் ஒரு மனிதன் 164 ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதும்

- நாள்தோறும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்; 164 வருடங்களில் 60 ஆயிரம் பெண்களைத் திருமணம் செய்துகொண்டான் என்பதும்

- அந்த 60 ஆயிரம் பெண்களில் ஒருவருக்குக்கூட குழந்தையே பிறக்கவில்லை என்பதும்

- குழந்தை பெறுவதற்காக புத்திரகாமேஷ்டி யாகம் செய்தான்; அதன்மூலம் மூன்று மனைவிகள், நான்கு குழந்தைகளைப் பெற்றார்கள் என்பதும் எவ்வளவு பிரமாண்டமான கற்பனை!

இப்படிப்பட்ட வரைமுறையற்ற கற்பனைகளில் உருவாக்கப் பட்டது தான் ராமாயணம்.

அந்தக் கற்பனைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோன்ற கற்பனைதான்;

பாலங்கட்டுவது எப்படி என்றே கண்டுபிடிக்கப்படாத காலத்தில் பதினேழரை லட்சம் வருடங்களுக்கு முன்பு குரங்குகள் ஒன்று சேர்ந்து - கடலிலே பாலம் கட்டின என்பதும்,

ராமாயணம் நடந்த கதையா? கற்பனையா? என்ற சர்ச்சை இன்று நேற்று முளைத்த புத்தம் புதிய சர்ச்சை அல்ல; சேது சமுத்திரத் திட்டத்தை அமல் நடத்த முன்வந்ததற்குப் பிறகு உருவான சர்ச்சை அல்ல.

1920-களிலேயே - தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய காலத்திலேயே தமிழகம் எங்கும் தீ பரவியது போல - பற்றி எரிந்த பரபரப்பான சர்ச்சை அது!

ராமாயணத்தைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும் என்று அனல் பறக்கப் பிரச்சாரம் செய்யப்பட்ட காலம் அது.

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்களை எல்லாம் பொது மேடையில் சந்தித்து நேருக்கு நேர் நின்று ராமாயணத்துக்கு எதிராக வாதாடி வெற்றி பெற்றார் பேரறிஞர் அண்ணா.

இப்படி ராமாயணம் பற்றிய சர்ச்சை கொழுந்துவிட்டு எரிந்த காலத்தில், ராமாயணத்தில் அபார நம்பிக்கை கொண்ட ராஜாஜி - இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்,

ராமாயணம் நடந்ததா? கற்பனையா? ராமன் - ராவணன் போன்றோர் வாழ்ந்தவர்களா? கற்பனையில் உதித்த கதா பாத்திரங்களா? என்ற கேள்விகளுக்குத் திட்டவட்டமாக - தெளிவாக பதிலளிக்க முன்வந்தார்.

தன் கருத்துகளை அவர் வெளியிட்ட இடம் சிறைச்சாலை. 1930-இல், சுதந்திரப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த ராஜாஜி, ஒரு நாள் - ராமாயணம் பற்றிய சர்ச்சை குறித்துப் பேச்சு வந்தபோது, சிறையில் தம்மோடு இருந்த நண்பர்களிடம் கூறிய கருத்துகளையே பின்னர் கட்டுரையாகவும் எழுதினார். அது, 'ராஜாஜியின் கட்டுரைகள்' என்ற தொகுப்பு நூலிலும் இடம் பெற்றிருக்கிறது.

'பொருளற்ற சண்டைகள்' என்பது ராஜாஜி எழுதிய ஒரு கட்டுரையின் தலைப்பு.

ராமாயணம் நடந்ததல்ல... நன்மைக்கும், தீமைக்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்ட வால்மீகி முனி சிருஷ்டித்த கற்பனைதான் என்று வாதிடுகிறார் அவர். அது வருமாறு:-

"வடக்கிற்கும், தெற்கிற்கும் நடந்த கோர யுத்தமே ராமாயணம் என்று சிலர் சொல்லும் வேடிக்கையைக் கண்டு அழுவதா, சிரிப்பதா

என்று தெரியவில்லை. ரைடர் ஹாகார்டு அதையே ஓர் உண்மைச் சரித்திரமாக எண்ணி, அதைக் கொண்டு ஆப்பிரிக்க தேசத்துப் பூர்வீக சரித்திரத்தை யாராவது ஆராய்ச்சி செய்தால் அந்த நாட்டவர் நகைப்பார்கள்.

இங்கே பண்டித சிகாமணிகளில் சிலர், ராவணனை ஒரு தமிழனாகப் பாவித்து வருகிறார்கள். அதிலும் ராமனைத் தீயவனாகவும், ராவணனை நல்லவனாகவும் பார்க்கிறார்கள். தமிழர் இம்மாதிரி ராவணனைப் பாராட்டிப் பார்ப்பதைக் கண்டு தெலுங்கர்கள் நகைப்பார்கள். நமக்குள் இவ்விஷயத்தில் தீவிர மத வேறுபாடு ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் வெறுப்பதும் பகைப்பதுமாக இருக்கிறோம் என்று அவர்கள் அறியாதபடியால், இது ஒரு வேடிக்கை என்று ஆந்திரர்கள் எண்ணலாம்.

வால்மீகி முனி அல்லது யார் முதலில் பாடினாரோ அந்தக் கவிஞர், ஓர் அரக்கனைக் கற்பித்தார். உள்ளும் புறமும் மகா பயங்கரமாக விரிந்த ஒரு பிரகிருதியை சிருஷ்டித்தார். தமிழர் சிலர், அந்த அரக்கனே நம் குலபுருஷன் என்று வைத்துக் கொள்ள முற்படுகிறார்கள்.

கதையைச் சரித்திரமாக்கி, அதனின்று பகைமை உண்டாக்கிக் கொண்டு, ஒருவரையொருவர் தாக்கி, இல்லாத துக்கத்தைச் சம்பாதிக்கப் பார்க்கிறோம்'' - என்கிறார் ராஜாஜி.

ராஜாஜி ராமாயணத்தில் கைதேர்ந்தவர்; ராமாயணத்தை 'சக்ரவர்த்தித் திருமகள்' என்ற தலைப்பில் புத்தகமாகவே எழுதியிருக்கிறார். அது ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு பல்லாயிரம் பிரதிகள் விற்று சாதனை படைத்த புத்தகம்.

1930 ஆம் ஆண்டிலேயே ராமாயணம் நடந்த கதையல்ல; வால்மீகி முனி சிருஷ்டித்த கற்பனை கதை என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் ராஜாஜி. 2007 இல் "ராமாயணம் நடந்தது தான்; ராமன் வாழ்ந்தான்; அவன் கடவுள்'' என்று ஓங்காரக் கூச்சலிடுகிறார்களே அத்வானிகள்! முதன்முதலில்,

ஆற்றில் - கடலில் பாலங்கள் கட்டப்பட்டது எந்தக் காலத்தில் என்பதுபற்றி இணைய தளங்களில் பல்வேறு சரித்திர ஆதாரங்கள்

இருக்கின்றன; அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் பரிசீலிக்கலாம்! பதினேழரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு எந்தப் பாலத்தையும் மனிதர்களே கட்டியதில்லை என்பதுதான் அவற்றின் சாரம்.

- 'முரசொலி', 15.9.2007

கே.எம். முன்ஷி கூறுகிறார்:

புராணங்களும், இதிகாசங்களும் மக்களின் மெய்ச் சரித்திரமல்ல. இவை மக்கள் வரலாற்றை அறிவதற்கோ-சரித்திர உண்மைகளை அறிவதற்கோ ஆதாரமாகா. இவை வெறும் மத இலக்கியத் தொகுப்புகளே...

- கே.எம்.முன்ஷி ("இந்திய மக்களின் கலாச்சாரமும்-வரலாறும்", பக்கம் 81)

இராஜராஜன் சிலையும் - ராமர் பாலமும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும்!

“சேது சமுத்திரத் திட்டம் மூலம் ராமர் பாலத்தை அழிக்க நினைப்பது இந்துக்களுக்கு எதிரான சதித்திட்டம்” - என்று கூறியிருக்கிறார் பூரி சங்கராச்சாரியார்.

“இலங்கையில் சிறைப்பட்டு இருந்த சீதையை மீட்க, இலங்கை செல்வதற்காக திரேதா யுகத்தில் கடவுள் இராமரால் அமைக்கப்பட்டதே ராமர் பாலம். இதை அழிக்க நினைக்கும் நபரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்”

- என்றும் சாபமிட்டிருக்கிறார் அந்த சங்கராச்சாரியார்.

பூரி சங்கராச்சாரியார் போன்றவர்களுக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும் அளவுக்கு இப்போது என்ன நடந்து விட்டது?

“ராமர் பாலத்தை (!) இடிக்கக்கூடாது” என்று சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக சுப்பிரமணியன் சுவாமி உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு தொடர்பாக மத்திய தொல்பொருள் ஆய்வு மையம் ஓர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதிலே,

“இராமாயணம் நடந்த கதை அல்ல, அதன் கதாபாத்திரங்களான ராமர், ராவணன் போன்றவர்கள் எல்லாம் நிஜத்தில் வாழ்ந்தவர்கள் அல்ல, கற்பனைப் பாத்திரங்கள்”

“சேது சமுத்திரத்திட்டம் அமல் நடத்தப்படும் பாக்ஜலசந்தியில் காணப்படும் மணல் திட்டுகள் பாலம் அல்ல, அவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவைகளுமல்ல, இயற்கையில் உருவான மணல் திட்டுகளே அவை”

- என்று விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அறிக்கையின் இந்தப் பகுதியைத்தான் இப்போது சிலர் ஆட்சேபகரமான கருத்துகள் என்று கூறி வானத்துக்கும் பூமிக்குமாக தாவி - அந்தத் துறையினர் மீது கோபப்படுகிறார்கள் - அப்படிச் சொன்னதற்காக கண்டனக் கணைகளைத் தொடுக்கிறார்கள்.

1970-களில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த போது தஞ்சையில் உலக அதிசயங்களில் ஒன்று என்று கருதத்தக்க - நிழல் விழாக் கோபுரத்துடன் கூடிய பெரியகோவில் அற்புதச் சிற்பக் கலைப் பொக்கிஷமாக வடிவமைத்துக் கட்டிய ராஜராஜ சோழனுக்கு சிலை அமைத்து அதனை பெருவுடையார் கோயிலின் உட்புறம் அமைப்பது என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்களின் ஆதரவோடு முடிவு எடுக்கப்பட்டது.

அன்று -

இராஜராஜன் கட்டிய கோயிலுக்குள் இராஜராஜன் சிலையை அமைக்கக்கூடாது; வெளியே - வீதியிலேதான் அமைக்க வேண்டும் என்று மதவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அப்போது அவர்கள் இதே தொல்பொருள் ஆராய்ச்சி மையத்திடம் தான் படையெடுத்தார்கள். தஞ்சைப் பெருவுடையார் கோயில் - தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் ஆளுகைக்குட் பட்ட கோயில்.

ஆகவே - அத்துறையினரிடம் காவடி எடுத்த மதவாதிகள் "தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் பாதுகாப்பில் உள்ள கோயிலுக்குள் புதிதாக எந்த சிலையையும் வைக்க எவருக்கும் உரிமை இல்லை" என்பதாக-

தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தின் சாட்சியாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

இராஜராஜன் சிலையை கோயிலுக்குள் வைக்க முடியாமற் போய்விட்டது. கோயிலுக்கு வெளியே தான் இன்றும் மாமன்னர்

இராஜராஜன் சிலை இருக்கிறது.

அன்று இராஜராஜன் சிலையை கோயிலுக்குள் வைக்கக்கூடாது - என்பதற்கு தொல்பொருள் துறையினரின் அதிகாரத்தை சுட்டிக்காட்டி வாதிட்ட அதே மதவாதிகள் தான் இன்று - அதே தொல்பொருள் ஆராய்ச்சித்துறை, "அப்படியெல்லாம் சொல்ல அதிகாரமில்லை, அப்படி அது சொன்னது ஆட்சேபத்திற்குரியது, இந்துக்களின் மனதைப் புண்படுத்துவது" என்றெல்லாம் இன்று குதியாட்டம் போட்டு - கோபம் கொப்பளிக்க சாபமிடுகிறார்கள்!

கோயிலைக் கட்டியவனே இராஜராஜன்தான்; எனினும் அவனது திருவுருவச் சிலையை கோயிலுக்குள் வைக்கக்கூடாது என்று வாதிட அன்று அவர்களுக்கு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அதிகாரம் - அறிவு - ஆராய்ச்சி எல்லாம் தேவைப்பட்டது.

"ஆ... தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அதிகாரத்துக்குள் தலையிடுவதா?" என்றெல்லாம் அன்று தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைத் தலைமேல் வைத்துக் கொண்டு கோரத்தாண்டவம் ஆடினார்கள்.

இன்று அதே தொல்பொருள் துறை "இராமர் கட்டிய பாலம் இல்லை, இராமரே கற்பனைக் கதாபாத்திரம் - கடலில் காணப்படுவது மணல் திட்டுக்களே" என்று ஆய்வு செய்து ஆய்வு அடிப்படையில் சொன்னால்,

"அப்படிச் சொல்ல நீ யார்?" என்று அந்தத் துறைக்கு எதிராகப் பாய்ந்து பிராண்டுகிறார்கள்.

பூரி சங்கராச்சாரியார் இன்னும் ஒரு படி மேலே போய் "இராமர் பாலத்தை அழிக்க நினைப்பவர்களை இந்த நாட்டை விட்டே துரத்த வேண்டும்" என்கிறார்.

"திரேதா யுகத்தில் இராமர் இந்தப் பாலத்தைக் கட்டினார். இதன் வழியாகத்தான் இலங்கை சென்றார் சீதையை மீட்க" என்றார் அவர்!

- இராமாயணத்தில் - இராமாயணத்தை இயற்றிய வால்மீகி;

இராமன் இராவணன் போன்று படைத்த பல்வேறு கற்பனைப் பாத்திரங்களில் சூர்ப்பனகை என்று ஒரு பாத்திரத்தையும் படைத்திருக்கிறார்.

(1) இராவணனின் தங்கைதான் சூர்ப்பனகை. சூர்ப்பனகைதான் இராமாயணத்தில் முதன் முதலாக இலங்கையிலிருந்து இந்தியா வந்தவர். அவரை இராம லட்சுமணர்கள் அவமதித்து மானபங்கப் படுத்தி - விரட்டுகிறார்கள் - சூர்ப்பனகை உடனடியாக இலங்கை சென்று இராவணனிடம் முறையிடுகிறார்.

அப்போது சூர்ப்பனகை எந்த வழியாக இந்தியா வந்தார்? எந்த வழியாக இலங்கை சென்றார்?

(2) இராமாயணத்தில் உள்ளபடி சூர்ப்பனகைக்குப் பிறகு இங்கு வந்தவர் இராவணன். அவர் சீதையைத் தூக்கிக் கொண்டு போனார் என்கிறது இராமாயணம்.

அப்போது இராவணன் எந்த வழியாக இங்கு வந்தார்? சீதையைத் தூக்கிக் கொண்டு எந்த வழியாக உடனடியாக இலங்கை சென்றார்?

இராமன் சீதையை மீட்க மட்டும் - ஒரு புது வழியைக் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது?

மனிதர்களாகிய சூர்ப்பனகை - இராவணன் ஆகியோர் எல்லாம் வெகு சுலபமாக இந்தியா வந்து விட்டு இலங்கை திரும்பியிருக்கிறார்கள் என்றால் கடவுளான இராமர் மட்டும் ஏன் ஒரு புது வழியை கடலில் உருவாக்க வேண்டும்?

குரங்கு அனுமான் வான் வழியே பறந்து இலங்கை சென்றார் என்றால் கடவுள் இராமனும் தன் படையோடு வானத்தில் பறக்க முடியாதா? - பூரி சங்கராச்சாரியாருக்கே வெளிச்சம்!

- 'முரசொலி', 17.9.2007

இதிகாசம் என்றால் நடந்தது என்று அர்த்தமா?

“இராமாயணம் நடந்த கதை அல்ல; இராமர், இராவணன் போன்றவர்கள் கற்பனைப் பாத்திரங்களே தவிர - நிஜத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர்” - என்பது தொல்பொருள் ஆய்வுத் துறையின் திட்டவட்டமான, தெளிவான முடிவு!

பா.ஜ.க.வினரும் - மதவாதிகளும், “இல்லை, இல்லை. இராமாயணம் நடந்த கதைதான்; இராமர் கற்பனை அல்ல; இராமர் வாழ்ந்தார்; பாலம் கட்டினார்” என்கிறார்கள்!

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தைச் சேர்ந்த ஒரு பிராமணோத்தமர்; அவர் வாழும் கலை என்ற அமைப்பை உருவாக்கி அதன் சார்பில் உலகம் சுற்றி வாழும் கலை பற்றி உபதேசித்து வருகிறார். அவரை பிராமண மகாஜனங்கள் சிறீசிறீ ரவிசங்கர்ஜி என்று அன்போடு அழைக்கிறார்கள். அவர் இப்போது ஜெர்மனியில் இருக்கிறார்!

உச்சநீதி மன்றத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர், ராமாயணம் நடந்ததல்ல; கற்பனை என்று அறிக்கை கொடுத்ததைக் கேள்விப்பட்டதும், துள்ளிக் குதித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார் அவர். அதிலே,

“இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்கள் என அழைக்கப்படுபவை. இதிகாசம் என்றால் ‘நடந்தவை’ என்று பொருள். இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளபடி இராமர் வாழ்ந்துள்ளார் என்பதே இதற்குப் பொருள். முனிவர்கள் பலர் புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு விளக்கியுள்ளார். புராணங்கள் என்பவை கற்பனையானவை, எடுத்துக் காட்டுக் கதைகள். இதிகாசங்கள் என்பவை உண்மையில் நடந்தவை என அவர்கள் கூறியுள்ளனர்.”

- என்று குறிப்பிட்டிருக்கிறார் அவர். இதன் மூலம்

புராணங்கள்தான் கற்பனை; இதிகாசங்கள் நடந்தவை என்று புதியதோர் சர்ச்சைக்குக் கொடியுயர்த்தி வைத்திருக்கிறார் அவர். புராணங்கள்தான் கற்பனை

என்றால் தமிழகத்தில் ஆஸ்திகர்கள் மத்தியில் பா.ஜ.க. பாஷையில் சொல்வதானால் இந்துக்கள் மத்தியில் பிரபலமாயிருக்கும்

– கந்த புராணம்

– பெரிய புராணம்

– திருவிளையாடற் புராணம்

ஆகிய புராணங்கள் எல்லாம் பொய்; கற்பனை என்கிறார் அவர். இது ஒருபுறம் இருக்கட்டும்.

இதிகாசங்கள் என்றால் நடந்தவை என்று அர்த்தம் என்கிறாரே - அதன்படி பார்த்தால் நடந்தவைகள் எல்லாமே ஆதிகாசங்கள் தானே! ஆனால் இந்தியாவில் மௌரியர் ஆட்சி நடந்திருக்கிறது. குப்த வம்ச ஆட்சி, மொகலாயர் ஆட்சி, மராத்தியர் ஆட்சி, பிரிட்டிஷார் ஆட்சி - என்று பல்வேறு ஆட்சிகள் நடந்திருக் கின்றன. அது போலவே - தமிழக வரலாற்றிலும் சங்க காலம் - களப்பிரர் ஆட்சி, பல்லவர் ஆட்சி, பாண்டியர் ஆட்சி, சோழர் ஆட்சி - என்றெல்லாம் நடந்திருக்கின்றன!

நடந்தவைகள் எல்லாமே இதிகாசங்கள்தான் என்றால் - மேற்கண்ட ஆட்சிகளின் காலத்தை - இதிகாசங்கள் என்று எவரும் குறிப்பிடுவதில்லையே ஏன்? ராமாயணத்தையும், மகாபாரதத் தையும் மட்டும்தானே இதிகாசங்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அது ஏன்?

இதிகாசங்கள் நடந்தவை அல்ல; அவை கற்பனை. அதனால்தான் "எப்போது நடந்தது என்று கேட்டால் குத்து மதிப்பாக பதினேழரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு - கிரேதாயுகத்தில் நடந்தது" என்று கேட்பவரின் காதுகளில் பூச் சுற்றுகிறார்கள்.

உண்மையில் நடந்த சம்பவங்களை வகைப்படுத்தி வருட வாரியாகப் பட்டியலிட முடியும் என்பதற்கு இதோ ஒரு தொகுப்பு:-

1. மௌரிய வம்ச ஆட்சி (கி.மு. 320–184)

சந்திர குப்த மவுரியன் (கி.மு. 320–297)

பிந்துசாரர் (கி.மு. 297–273)

அசோகர் (கி.மு. 273–232)

பின்வந்தவர்கள் (கி.மு. 232–184)

2. குப்த வம்ச ஆட்சி (கி.பி. 320–600)

முதலாம் சந்திரகுப்தர் (கி.பி. 320–326)

சமுத்திர குப்தர் (கி.பி. 326–375)

இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 375–413)

3. **மொகலாயர்** ஆட்சி (கி.பி. 961–1525)

கஜினி முகமது (கி.பி. 997–1030)

4. முகலாயப் பேரரசு (கி.பி. 1526–1858)

பாபர் (கி.பி. 1526–1530)

அக்பர் (கி.பி. 1556–1605)

ஔரங்கசீப் (கி.பி. 1658–1707)

5. மராத்தியர் ஆட்சி (கி.பி. 1646–1818)

சிவாஜி காலம் (கி.பி. 1646–1680)

6. பிரிட்டிஷ் ஆட்சி (கி.பி. 1756–1947)

தமிழக வரலாறு (கி.மு. 300– கி.பி.300)

1. சங்க காலம்

2. களப்பிரர் காலம் (கி.பி. 300– கி.பி.600)

3. பல்லவர் காலம் (கி.பி. 590– கி.பி.668)

மகேந்திரவர்மன் (கி.பி. 590– கி.பி.630)

நரசிம்மவர்மன் (கி.பி. 630– கி.பி.668)

4. பாண்டியர் பேரரசு (கி.பி. 700– கி.பி. 1400)

மாறவர்மன் – சுந்தர பாண்டியன் (கி.பி. 1219– கி.பி. 1251)

கடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1251– கி.பி. 1268)

5. சோழப் பேரரசு (கி.பி. 800– கி.பி.1300)

இராஜராஜன் (கி.பி. 985– கி.பி. 1016)

இராஜேந்திர சோழன் (கி.பி. 1012– கி.பி. 1044)

குலோத்துங்கள் (கி.பி. 1070– கி.பி. 1122)

6. விஜய நகரப் பேரரசு (கி.பி. 1400– கி.பி. 1550)

இப்படி ஏன் இராமாயணத்தை வருடம் குறிப்பிட்டு தசரதன் ஆட்சிக்காலம் - இராமர் ஆட்சிக் காலம் - லவகுசர்களின் ஆட்சிக்காலம் என்று பட்டியல் போட்டுக் காட்ட முடியவில்லை?

ராஜாஜியும், கே.எம். முன்ஷியும், பண்டித நேருவும், நீலகண்ட சாஸ்திரியும், இந்து மதத்தை உலகெங்கும் பரப்பிட முயன்ற சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பது போல்

இராமாயணம் நடந்த கதை அல்ல!

வால்மீகியின் கற்பனை!

கற்பனை மட்டுமே!

(நன்றி: 'முரசொலி', 17.9.2007)

இராமன்பற்றி ஒரே மேடையில் விவாதம் செய்ய அத்வானி தயாரா?

கலைஞர் அறைகூவல்!

இராமன்பற்றி ஒரே மேடையில் விவாதம் செய்ய அத்வானி தயாரா? என்றும், தமிழ்நாட்டை குறிப்பாக தென்னகத்தை வளப்படுத்தக் கூடிய சேது சமுத்திரத் திட்டத்தை வரவிடாமல் தடுப்பவர்களின் எண்ணம் நிறைவேறிவிடக் கூடாது என்பதுதான் தி.மு. கழகத்தின் கருத்து என்றும் முதல்வர் கலைஞர் அவர்கள் 20.9.2007 அன்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:

செய்தியாளர்: *பா.ஜ.க., தலைவர், அத்வானி அவர்கள் ராமர் பற்றி நீங்கள் கூறிய கருத்துகளை திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரே?*

முதல்வர் கலைஞர்: *வால்மீகி முனிவர் எழுதியுள்ள ராமாயணத்தில் ராமர் பற்றி சொன்னதைப்போலவா நான் சொன்னேன். ராமர் சோமபானம் என்ற மதுபானம் அருந்துகிறவர் என்றெல்லாம் எழுதியிருக்கிறார். நான் அப்படியெல்லாமா சொன்னேன். வால்மீகி ராமாயணத்தை அத்வானி அவர்கள் படித்துப் பார்க்கவேண்டும். அவர் அதைப் படித்துவிட்டு, அதுகுறித்து என்னிடம் ஒரே மேடையில் விவாதம் நடத்த முன்வந்தால், அவரைச் சந்திக்கவும், விவாதிக்கவும் நான் தயாராக இருக்கிறேன்.*

செய்தியாளர்: சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்க சதி நடப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவினைத் திரும்பப் பெற்றதுகூட இதிலே இடம்பெறுமா?

கலைஞர்: அவர்கள் செய்கின்ற சதிக்கு தங்களை அறியாமல் மத்திய அரசு துணை போகக்கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து.

செய்தியாளர்: மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் கடைசியாக சொல்லியிருப்பதைத் திரும்பப் பெற முடியாது என்று சொன்னால், உங்கள் முடிவு என்ன?

கலைஞர்: சொல்லட்டும், சொன்ன பிறகு சொல்கிறேன்.

நேருவின் "உலக சரித்திரம்" என்ற நூல்

செய்தியாளர்: அத்வானி அவர்கள் மேலும் கூறும்போது, ஏசு பற்றியோ, நபிகள் நாயகம் பற்றியோ குறிப்பிட்டு அவர்களுடைய வாழ்க்கையில் அதிசயங்கள் நடந்திருக்கிறதே? அதைப்பற்றி யெல்லாம் விமர்சிக்காமல் ராமரைப்பற்றி மட்டும் நீங்கள் கேள்வி கேட்டு, இந்துக்களின் மனதைப் புண்படுத்தலாமா என்றெல்லாம் கேட்டுள்ளாரே?

கலைஞர்: நாமெல்லாம் 'இந்து' மதம் என்றுதானே கூறப்படுகிறது; அதனால் இதைப்பற்றி கூறினேன். பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் யார், எப்படி என்பதைப்பற்றி யெல்லாம் நான் சொல்லத் தேவையில்லை. அந்த நேருவை விட இவர்கள் யாரும், ராமருக்கு வக்காலத்து வாங்குகின்றவர்கள் யாரும் பெரியவர்கள் இல்லை. அந்த நேரு எழுதிய "உலக சரித்திரம்'' என்ற நூலில் ராமர் என்பது ஒரு கற்பனை பாத்திரம், ஆரிய - திராவிட போராட்டத்தின் ஒரு கூறுதான் ராமாயணம், அது ஒரு கதை என்றுதான் சொல்லியிருக்கிறார். ராஜாஜி எழுதிய ராமர்பற்றிய ஆராய்ச்சி நூலிலேகூட இந்தப் பிரச்சினைபற்றிப் பேசும்போது இவை எல்லாம் உண்மையில் நடந்தது என்று அவர் எழுதிட வில்லை. இவற்றைப்பற்றியெல்லாம் தயவு செய்து உங்களைப் போன்ற இளைஞர்கள் படித்துப் பார்க்கவேண்டும்.

செய்தியாளர்: அத்வானி அவர்கள் உங்களைப்பற்றிக் குறிப்பிட்டு, நீங்கள் முதலமைச்சராக இருப்பதால் அரசியல் சட்டப்படி ராமரைப்பற்றி பேசக்கூடாது என்று கூறியதைப்பற்றி?

கலைஞர்: அரசியல் சட்டத்தில் ராமரைப்பற்றி பேசக்கூடாது என்று சொல்லவில்லை. நான் யாரையும் புண்படுத்தவில்லை. உண்மையாக உள்ள விஷயங்களைத் தெரிவிப்பதில் தவறில்லை. ஒருவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைச் சொல்வது என்பது யாரையும் புண்படுத்துவதாக ஆகாது. இந்துக்களையோ, மற்றவர்களையோ புண்படுத்துகின்ற காரியத்தை தி.மு. கழகம் எப்போதும் செய்யாது, செய்ததும் இல்லை.

செய்தியாளர்: அப்படியென்றால் நீங்கள் ராமர் பற்றி கூறியதைத் திரும்பப் பெறவேண்டிய அவசியம் இல்லை என்கிறீர்களா?

கலைஞர்: வால்மீகி ராமாயணத்தில் ராமரைப்பற்றி எழுதப்பட்டதைப் போல நான் கூறவில்லை. ராமாயணம் என்பது ஒரு கதை. நான் எத்தனையோ நாவல்கள் எழுதவில்லையா? அதிலே எத்தனையோ கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன. அவர்கள் எல்லாம் இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் பேட்டியளித்தார்.

- 'முரசொலி', 21.9.2007

அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

விவேகானந்தர் பேசுகிறார்!

தென் இந்தியாவில் இருந்த மக்களேதான் இராமாயணத்தில் குரங்குகள் என்றும், அரக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(-சுவாமி விவேகானந்தர் அவர்களது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும், இராமாயணம் என்னும் தலைப்பில், பக்கம்-587ஆம்)

இராமன்-இராமாயணத்தைப் பற்றி முதல்வர் கலைஞர் கூறியதில் தவறு என்ன? ஆதாரங்கள் இதோ! வாங்கிப் படியுங்கள்!

1. **தீராவிடர்-ஆரியர் உண்மை** -தந்தை பெரியார் ரூ.2/-
2. **இராமாயணக் குறிப்புகள்**-தந்தை பெரியார் ரூ.15/-
3. **இராமாயணப் பாத்திரங்கள்** -தந்தை பெரியார் ரூ.25/-
4. **வால்மீகி இராமாயண சம்பாஷணை** ரூ.35/-
   -தந்தை பெரியார்
5. **The Ramayana (A True Reading)** Rs. 30/-
   -Periyar E.V.Ramasami
6. **கம்ப ரசம்** -அறிஞர் அண்ணா ரூ.15/-
7. **தீ பரவட்டும்!** -அறிஞர் அண்ணா ரூ.15/-
8. **கந்தபுராணமும்-இராமாயணமும் ஒன்றே** ரூ.2.25/-
   -அன்னை மணியம்மையார்
9. **பெரியாரியல் இராமாயண ஆய்வுச் சொற்பொழிவுகள்** ரூ.60/-
   -கி.வீரமணி
10. **சேது சமுத்திரத் திட்டமும்-இராமன் பாலமும்** ரூ.5/-
    -கி.வீரமணி
11. **இராமாயண ஆராய்ச்சித் தொகுப்பு** ரூ.200/-
    -பண்டித.இ.மு.சுப்பிரமணியபிள்ளை (சந்திரசேகரப்பாவலர்)
12. **இராவணப் பெரியார்** ரூ.20/-
    -பேரா.மு.சி.பூரணலிங்கம் பிள்ளை
13. **இயக்க வரலாற்றில் இராமாயண எதிர்ப்பு** ரூ.6/-
    -கவிஞர். கலி.பூங்குன்றன்
14. **யார் இந்த இராமன்?** -பேரா.அறிவரசன் ரூ.8/-

கிடைக்கும் இடங்கள்:

திராவிடன் புத்தக நிலையம்

பெரியார் திடல், சென்னை-600 007 Ph: 26618163

பெரியார் மாளிகை, திருச்சி-17 Ph: 2771815

பெரியார் புத்தக விற்பனை நிலையங்கள்

திருவாரூர், நாகர்கோவில், அருப்புக்கோட்டை, காரைக்குடி, திருச்சி, சேலம், போடிநாயக்கனூர், ஈரோடு, திருப்பூர், தருமபுரி, கள்ளக்குறிச்சி, கும்பகோணம்

ரூ.438 மதிப்புள்ள இந்நூல்கள் சிறப்பு தள்ளுபடி விலையாக **ரூ.350/-**க்குக் கிடைக்கும் இன்றே வாங்குவீர்!